புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பொறுப்பேற்றவுடன், 1-6-2011 முதல் 100 சதவீத கூலி உயர்வு அளிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்து அமருகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள், இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 268, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

268—

மெருகிடும் தொழிற்சாலை

***6632—திரு. டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதியில் கிரானைட் மெருகிடும் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தளி தொகுதியில் கிரானைட் மெருகிடும் தொழிற்சாலை அமைப்பதற்கும் அங்கு மதிப்புக் கூட்டப்பட்ட கிரானைட் கற்கள் தயாரித்து சந்தைப்படுத்துவதற்கும் மற்றும் சந்தை நிலவரம் அறிந்து, நிதிநிலைமைக்கேற்ப மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.

முற்பகல் 10-40

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தளி தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் டாமின் நிறுவனத்திற்குச் சொந்தமான விலை உயர்ந்த பிளாக் கிரானைட், மல்டி கலர் கிரானைட், பாக்ஸ் பாரடைசோ,

பாரடைசோ போன்ற கல் குவாரிகளில் அரசினுடைய டாமின் நிறுவனம் சார்பாக கிரானைட்டுகள் வெட்டி எடுக்கப்படுகின்றன. அவ்வாறு வெட்டி எடுக்கப்படுகின்ற கிரானைட் கற்களை மெருகூட்டுவதற்கு தளி தொகுதியிலே ஒரு மெருகூட்டும் தொழிற்சாலை அமைத்தால், அங்கே உள்ளூர் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். அதேபோல, மெருகூட்டப்பட்ட கிரானைட்டை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தால், அரசுக்கும் அதிகப்படியான அன்னியச் செலாவணி கிடைக்கும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டத்திலேயே தளி தொகுதியில்தான் அதிகமான கிரானைட் கற்கள் கிடைக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் 1991 ஆம் ஆண்டு மாதேபள்ளியில் ஒரு மெருகூட்டும் தொழிற்சாலை அமைத்து, அங்கே சிறப்பாக ஏற்றுமதி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொகுதியிலே கிரானைட் கற்கள் நிறைய கிடைக்கின்ற காரணத்தினால், புதிய தொழிற்சாலை வேண்டும் என்று கேட்டிருக்கின்றார்கள். அதைத்தான் நான் முன்கூட்டியே சொன்னேன்; சந்தை நிலவரத்திற்கு ஏற்ப மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிக்கப்படும் என்று சொன்னதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, மாதேபள்ளியில் உள்ள கிரானைட் மெருகூட்டும் தொழிற்சாலையில் மாதம் ஒன்றிற்கு எத்தனை கியூபிக் மீட்டர் கிரானைட் கற்கள் மெருகூட்டப்படுகின்றன; எத்தனை கியூபிக் மீட்டர் கிரானைட் சிலாப்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன;

அதன்மூலம் அரசுக்கு எத்தனை கோடி ரூபாய் அன்னியச் செலாவணி கிடைக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், நீங்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பேசிவைத்துக்கொண்டு கேள்வி கேட்கிறீர்களா? மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருடத்திற்கு 34,000 சதுர மீட்டர் அளவிற்கு அங்கே ஏற்றுமதி செய்யப்படுகின்றது. வருடத்திற்கு 4 கோடி ரூபாய் அளவிற்கு இலாபம் கிடைத்துக் கொண்டிருக்கின்றது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 269, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. முத்துக்குமார், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

269—

நகரப் பேருந்து

***435—திரு. வி. முத்துக்குமார்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருத்தாசலம் தொகுதி, கோ.பவழங்குடி-கட்டியநல்லூர்-கன்னியாங்குப்பம் வழித்தடத்தில் புதிய நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

விருத்தாசலம் தொகுதி, கோ.பவழங்குடி-கட்டியநல்லூர்-கன்னியாங்குப்பம் வழித்தடத்தில் புதிய நகரப் பேருந்து இயக்க, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று விரைவில் இந்த வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. முத்துக்குமார் அவர்கள்.*